will the Government consider the desirability of establishing Tractor Servicing Stations in the industrial estates that are being established?

THE HON. SRI R. VENKATARAMAN : I don't understand the question. If the hon. Member wants that Government should establish service centres, I don't think it is necessary. There are a number of private industries which are having these servicing facilities.

பொறியியல் பரிசு நிதி

* 720 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பொறியியல் துறையில், மிக உயர்ந்த அடிப்படைத் தத்துவம் ஒன்றை ஆராய்ந்து காண்பவருக்கு ஒரு பெருந்தொகை அளிப்ப தற்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் பரிசு நிதி Prize fund ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்ற மதிப்பீட்டுக் குழுவின் பரிந் துரையினை ஏற்று அமுலாக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா? ஆமெனில் எந்த ஆண்டு முதல்?

THE HON. SRI R. VENKATARAMAN : The recommendation is under examination.

புலவர் கா. கோவிந்தன் : நெடுஞ்சாலை ஆராய்ச்சி பிரிவினால் எவ்வளவு நல்ல பலன்கள் கிடைத்திருக்கின்றன என்பதைப்பற்றி பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் ஒரு முறை இந்த மன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளுக்குச் செலவுசெய்வதால் நல்ல பலனளிக்கும். ஆகவே, இதை மனதிற்கொண்டு விரைவிலேயே இந்தச் சிபாரிசை ஏற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆராய்ச்சி அவசியம் என் பதைப் பற்றிக் கருத்து வேற்றுமை கிடையாது. ஆராய்ச்சிகளுக்கு 'பிரைஸ்' கொடுக்க வேண்டுமென்றால் அதற்கு எவ்வளவு செல வாகும், கொடுக்கிற பணம் கணிசமாக இருக்க நம்மிடத்தில் நிதி வசதி எப்படி இருக்கிறது என்பதெல்லாம் இப்பொழுது பரிசீலனை யில் இருக்கின்றன.

தேயிலைத் தொழிற்சாலை

* 721 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர்: கனம் கைத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நீலகிரி ஜில்லாவில் கூட்டுறவுத் துறையில் தேயிலைத் தொழிற் சாலைகள் ஏற்படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நீலகிரி மாவட்டத்தில் ஏற்கனவே இரண்டு தேயிலைத் தயாரிப்பு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. நீலகிரி மாவட்டத்தில் மேலும் 6 தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளையும், தொழில் கூட்டுறவு மத்திய சேவா சங்கம் ஒன்றையும் ஏற்படுத்துவதற்கான ஒரு விரிவான திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

[25th July 1964

திரு. டி. கார்ச்சா கவுடர் : சார், உத்தேசிக்கப்பட்டுள்ள கூட்டுறவுத் தொழிற்சாலைகளை அமைக்க தேயிலை போர்டார் 60 லட்சம் ரூபாய் கொடுத்து அது மத்திய சர்க்காருடைய பரிசீலனையில் இருக்கிறது என்பது உண்மையா? அதைச் சீக்கிரமே ஏற்படுத்த அமைச்சர் விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஏற்படுத்தத்தான் முயற்சி எடுக்கப்படுகிறது; திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

நதித் திட்டங்கள் (திருநெல்வேலி)

*722 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருநெல்வேலி ஜில்லாவில் கீழ்க்கண்ட திட்டங்கள் எப்போது எடுத்துக் கொள்ளப்படும்?

1. ராம நதி
2. கடனு நதி
3. கீரியாறு
4. வைப்பாறு.

THE HON. SRI V. RAMAIAH : Ramanadhi and Gatana Reservoir Schemes are under consideration.

Ghiriyar scheme has been considered and deferred for the present.

Proposals for construction of anicuts across the Vaippar are under investigation by local officers.

திரு. எம். எஸ். செல்வராஜன்: சார், ராமநதி, கடனுறு, வைப்பாறு முதலிய திட்டங்களின் உத்தேச மதிப்பீடுகள் என்ன? In addition to stabilization of existing anycuts. அதிகமாக ஏக்கர்கள் கொடுக்கப்படுகின்றனவே, அது எந்தத் தொகுதியில் கொடுக்கப்படுகிறது என்பதையும் அறியலாமா?

THE HON. SRI V. RAMAIAH : The estimated cost for Gatana scheme is Rs. 89 lakhs. The scheme aims at stabilizing the existing ayacut of 7,355 acres, besides a new additional ayacut of 73 acres of single crop land and 232 acres of double crop land. The additional food production will be 1,388 tons.

Regarding Ramanadhi reservoir scheme, the estimated cost is Rs. 18 lakhs and it gives a return of 0.33 per cent. The food production anticipated is 1,500 tons.

திரு. எம். எஸ். செல்வராஜன்: சார், ராமநதி திட்டத்தை இப்பொழுது போட்டிருக்கக் கூடியதைவிட இன்னும் விரிவான திட்டமாக போடவேண்டும் என்று அரசாங்கம் ஒப்புக் கொண்டது நினைவிருக்கிறதா? அப்படி, விரிவாகச் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டதா என்று அறியலாமா?